## August 20, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா-சீனா இடையேயான நிலையான உறவு பிராந்திய மற்றும் உலக அமைதிக்கு வழிவகுக்கும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். இருநாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி உடனான சந்திப்புக்குப் பிறகு அவர் இவ்வாறு தெரிவித்தார்.
   i. இந்தியாவில் யூரியாவுக்கு அடுத்து அதிக தேவையுள்ள உரம் டிஏபி (டை அமோனியம் பாஸ்பேட்). இந்த உர விநியோகத்தில் உலக அளவில் சீனா முன்னணியில் உள்ளது.
   ii. இந்தியா தனது உரத் தேவைக்கு சீன இறக்குமதியை பெருமளவில் சார்ந்துள்ளது. 2023 முதல் இந்த உரங்களை ஏற்றுமதி செய்ய அதிக கட்டுப்பாடுகளை சீனா விதித்தது. இதனால் டிஏபி உள்ளிட்ட உரங்களின் இந்திய இறக்குமதி சரிந்தது.
   iii. அதேபோல் மின் வாகனங்கள், நவீன தொழில்நுட்ப உபகரணங், ஆளில்லா விமானங்கள் மற்றும் பேட்டரிகள் போன்றவற்றின் தயாரிப்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பொருளாக அரியவகை கனிமங்கள் கருதப்படுகிறது.
   iv. உலக அளவில் அரியவகை கனிமங்கள் விநியோகிக்கும் மையமாக சீனா விளங்குகிறது. பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த நிலையான அரியவகை கனிமங்கள் விநியோகம் இந்தியாவுக்கு தேவைப்படுகிறது.
   v. துளையிடும் இயந்திரங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதையும் சீனா நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், தற்போது இந்த மூன்று பொருள்களுக்கான ஏற்றுமதி கட்டுப்பாடுகளை சீனா தளர்த்தியுள்ளதால் இது இந்தியகான பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   vi. சீனாவுடன் இந்தியா நெருக்கம் காட்டத் தொடங்கினாலும் கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியாக தைவானுடனான இந்திய உறவில் எவ்வித மாற்றமும் இல்லை என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.
2. முன்னாள் ராணுவ வீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, தமிழக முதல்வர் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.
   i. "முதல்வரின் காக்கும் கரங்கள்" எனப்பெயரிடப்பட்டுள்ள திட்டத்தின் வாயிலாக, 155 முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.
   ii. புதிய திட்டத்தின்கீழ் முன்னாள் படைவீரர்களை சுயதொழிலில் ஈடுபடுத்தவும், சிறந்த தொழில் முனைவோர்களாக மாற்றவும் தேவையான நிதிகளும் பயிற்சிகளும் வழங்கப்படும்.
3. இந்தியா-சீனா இடையிலான வர்த்தகம் மற்றும் எல்லை பிரச்னைக்கு தீர்வுகாண நியாயமான, பரஸ்பரம் ஏற்கக் கூடிய செயல்திட்டத்தை ஏற்படுத்த முயற்சிப்பது என்று இந்திய- சீன சிறப்பு பிரதிநிதிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

i. இந்தியா-சீனா இடையே லிபுலேக் கணவாய், ஷிப்கி லா கணவாய் மற்றும் நாதுலா கணவாய் வழியாக எல்லை தாண்டிய வர்த்தகத்தை மீண்டும் தொடங்கவும், தெளிவான நடவடிக்கைகள் மூலம் பரஸ்பர வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு வழிவகை செய்யவும் கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

4. ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் சீனியர் பிரிவில் இந்தியாவின் மனு பாக்கர் வெண்கலப் பதக்கம் வெல்ல, ஜூனியர் பிரிவில் ராஷ்மிகா சாகல் தங்கப் பதக்கம் கைப்பற்றி அசத்தி னார்.
   i. கஜகஸ்தானில் நடைபெறும் இப்போட்டியில், இரட்டை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனு பாக்கர், மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவு இறுதிச்சுற்றில் 219.7 புள்ளி களுடன் 3-ஆம் இடம் பிடித்தார்.
   ii. சீனியர் இப்பிரிவில் சீனாவின் கியான்கே மா (243.2), தென் கொரியாவின் ஜின் யாங் (241.6) ஆகியோர் முறையே முதலிருஇடங்களைப் பிடித்தனர்.

5. அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில், உலகின் 2-ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் சாம்பியன் கோப்பை வென்றார்.
   i. இறுதிச்சுற்றில் அவரை எதிர்கொண்ட நடப்பு சாம்பியனும், உலகின் நம்பர் 1 வீரருமான இததாலியின் யானிக் சின்னர்.
   ii. உடல்நலக் குறைவால் போட்டியிலிருந்து விலக, அல்கராஸ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

6. சுமார் 75,000 கிலோ (75 டன்) எடையுடைய செயற் கைக்கோள்களை சுமந்து சென்று விண்வெளியில் பூமிக்கு அருகே தாழ்வான புவி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த வசதியாக 40 மாடி கட்டடம் போன்ற உயரமுடைய ராக்கெட்டை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) உருவாக்கிவருவதாக அதன் தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார்.
   i. இஸ்ரோ நிகாண்டில் ஏராளமான விண்வெளி திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இந்தியாவில் உள்ள பயனர்களுக்கு சேவையளிக்கும் வகையில் இந்திய விண்மீன் கூட்டத்தின் வழியாகச் செலுத்தப்பட்டு நிலைநிறுத்தப்படும் 'நாவிக்' செயற்கைக்கோள் திட்டம், என்1 ராக்கெட் திட்டம் மற்றும் இந்திய ராக்கெட்டுகளைப் பயன்படுத்தி அமெரிக்காவின் 6,500 கிலோ எடையுடைய தகவல்தொடர்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துதல் உள்ளிட்டவற்றை இஸ்ரோ நிகழாண்டில் மேற்கொள்ள உள்ளது.
   ii. தற்போதைய நிலையில், இந்தியா 55 செயற்கைக்கோள்களை விண்வெளியில் பயன்பாட்டில் கொண்டுள்ளது. அடுத்த 3 முதல் 4 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மும்மடங்காக அதிகரிக்கும்.

7. ஜம்மு- காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத் தில் மேகவெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி உயிரி ழந்தோரின் எண்ணிக்கை 64-ஆக அதிகரித்துள்ளது.

8. இனி அரசமைப்புச் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையின் கீழ் இடம்பெற்றுள்ள அனைத்து மொழிகளிலும் (22 மொழிகள்) அவை அலுவல்கள் மொழி பெயர்க்கப்படும் என்று அவைத்தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார். இது வரை 19 மொழிகளில் அவை அலுவல்கள் மொழிபெயர்க்கப்பட்ட நிலையில், காஷ்மீரி, கொங்கனி மற்றும் சந்தாலி மொழிகளில் கூடுதலாக மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று அவர் அறிவித்தார்.
9. சீனாவில் இம்மாத இறுதியில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) வருடாந்திர உச்சிமா நாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளதாக தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.
   i. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி உடனான ஆலோசனையின் போது சீனாவின் தியான்ஜின் நகரில் ஆக. 31, செப். 1 தேதிகளில் நடைபெறும் எஸ்சிஓ மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்பதை அஜீத் தோவல் உறுதிப்படுத்தினார்.

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
   i. வாங் யி - சீன வெளியுறவு அமைச்சர்
   ii. பி. சுதர்சன் ரெட்டி - முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர்
   iii. டாக்டர் வி. நாராயணன் – இஸ்ரோ தலைவர்.